2026 மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 131/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை

திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 (LW6) – சுபத்ரா |
| கணவர் பெயர்: | ஜெகநாதன் |
| ஊர்: | அனுமந்தன்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 32 |

23.03.2026

(2, 3 வது எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி, வடக்குத் தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது பாட்டி, அ.சா.2 எனது தாயார், அ.சா.3 எனது தம்பி ஆவார்கள். அ.சா.4 எனது அடுத்த தெருவில் வசித்து வருகிறார். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 01.05.2025 ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் நான் எனது வீட்டில் இருந்தேன்.

எனது வீட்டின் மாடியில் தண்ணீர் டேங்க் பார்க்க சென்றேன். அப்போது எனது தாயார் வீட்டில் அலறல் சத்தம் கேட்டது. அப்போது நான் ஓடிச்சென்று பார்த்தேன். அப்போது 10.30 மணிக்கு மேல் இருக்கும். எனது தந்தை இரத்த வெள்ளத்தில் கிடந்தார், எனது தாத்தா முத்துமாயன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

2. எனது தாயார் சுதா தலையில் இரத்தக்காயங்களுடனும், உடல்முழுவதும் காயங்களுடனும் இருந்தார். எனது தம்பி ஜெயசூர்யா வலது காதில் கடித்து இரத்தக்காயத்துடன் இருந்தார். எனது பாட்டி தவமணி இருந்தார். எனது பாட்டியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அப்போது எனது பாட்டி எதிரிகள் பார்த்திபன், ராஜேந்திரன், விஜயா ஆகியோர்கள் அடிகுழாய் இரும்பு கம்பி, ரீப்பர் கட்டை, சவுக்குக்கட்டை, பட்டாக்கத்தி, ஹாலோபிளாக் கல் ஆகியவற்றால் அடித்துப் போட்டுவிட்டதாக என்னிடம் கூறினார். அப்போது கூட்டத்தில் இருந்த ஒரு நபர் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார்.

3. ஆம்புலன்ஸ் வந்த உதவியாளர் எனது தாத்தா முத்துமாயனை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது தாயார், எனது தந்தை ஆகியோர்களை ஆம்புலன்ஸிற்கு ஏற்றி மருத்துவ சிகிச்சைக்காக உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள், அப்போது எனது தம்பி ஜெயசூர்யா உடன் சென்றார். சிறிது நேரம் கழித்து மற்றொரு ஆம்புலன்ஸில் எனது தாத்தாவை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். நானும், எனது பாட்டியும் உத்தமபாளையம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம்.

4. எனது பாட்டி நடந்த விபரத்தை என்னிடம் சொன்னார். எனது பாட்டி சொல்ல சொல்ல புகாரை நான் எழுதினேன். எழுதியதை எனது பாட்டியிடம் படித்து காண்பித்தேன். அதை எனது பாட்டி சரி என ஒப்புக்கொண்டு அந்த புகாரில் கைரேகை வைத்தார், நான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை 02.05.2025ம் தேதி விசாரித்தார்கள். மறுமுறை 06.05.2025ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள். புகார் கொடுக்கும்போது என்னை விசாரித்தார்கள். உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன்.

5. உத்தமபாளையம் நீதிபதியிடம் நடந்த விபரத்தை சொன்னேன், அந்த விபரத்தை வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுத்த பின்பு நானும், எனது பாட்டியும் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது தந்தைக்கு அதிக இரத்தப்போக்கு இருந்ததால் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சொன்னார்கள். க.விலக்கு சென்றபோது எனது தந்தையும் நள்ளிரவு 1.30 மணிக்கு மேல் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

6. எனது தந்தையும், எனது தாத்தாவையும் இறந்து க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். எனது தாயார் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். 4, 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள். எனது தந்தைக்கும் எதிரிகளுக்கும் இருந்த இடப்பிரச்சனையின் காரணமாக மேற்படி சம்பவம் நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமாக வாய் தகராறு அடிக்கடி ஏற்படும். பஞ்சாயத்தார்களை வைத்து சமரசம் பேசுவார்கள். எதிரிகள் பேச்சுவார்த்தைக்கு சரிவரவில்லை.

7. 1வது எதிரி பார்த்திபன் இராணுவத்திலிருந்து 2, 3 நாட்களாகவே இரவுநேரங்களில் எனது தந்தை வீட்டிற்கு முன்பு வந்து, எனது தந்தை தாயுடன் அடிக்கடி பிரச்சனை செய்கிறீர்களா நான் உங்களை பார்த்துக்கொள்கிறேன்

என்று தகராறு செய்து வந்தார். சம்பவ தினத்தன்றும் அதே போன்று 1வது எதிரி எனது தந்தையின் வீட்டிற்கு முன்பு வந்து பிரச்சனை செய்தார். எனது தந்தை பக்கத்தில் இருந்த தர்மர் மகன் இராஜேந்திரனிடம் சென்று கூறினார், அதற்கு ராஜேந்திரன் வந்து இரவு நேரங்களில் வந்து பிரச்சனை செய்ய வேண்டாம், பகலில் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

8. அதற்கு எதிரிகள் பஞ்சாயத்திற்கு ஆள் அழைத்து வருகிறீர்கள் என்று கூறி கட்டை, கம்பு, அடிகுழாய் இரும்பு கம்பி, பட்டாக்கத்தி, ஹாலோபிளாக் கல் ஆகியவற்றை எடுத்து வந்து, முத்துமாயன், சுந்தர், சுதா ஆகியோர்களை மாறி மாறி தாக்கினார்கள். எனது தந்தைக்கு தலை, கண், வாய், உடம்பு, கை ஆகிய இடங்களில் அடிப்பட்டு இருந்தது. எனது தாத்தா முத்துமாயனுக்கு தலை, விரல்கள், உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. எனது தாயார் சுதாவிற்கு தலை, கழுத்து, இடுப்பு, உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

9. சம்பவம் பற்றிய விபரங்கள் எனக்கு சொல்லி தெரியும் என்றால் சரிதான். என்னுடைய கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி பார்த்திபன் இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி எப்போது ஊருக்கு வருவார், போவார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இடம் சம்பந்தமான பஞ்சாயத்துகள் எப்போது பேசப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாட்சி தர்மர் மகன் ராஜேந்திரன் எனது உறவினர் என்றால் இல்லை.

10. அவர் எனது உறவினர் என்றும், வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சம்பந்தமாக போலீசார் என்னை முதன்முதலில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் சொன்ன விபரங்களை பதிவு

செய்துக் கொண்டார்களா என்றால் பதிவு செய்து கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னை விசாரிக்கும்போது எனது பாட்டி தவமணி உடன் இருந்தார் என்றால் சரிதான்.

11. எனது பாட்டியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, கைரேகை செய்தார் என்றால் சரிதான். அதில் நானும் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரணை செய்யும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 1 மணிக்கு மேல் இருக்கும். சம்பவ இடத்திற்கு சென்ற போது எத்தனை மணி இருக்கும் என்றால் 10.45 இருக்கும். அவசர போலீஸ் 100 அழைக்க தெரியும் என்றால் சரிதான். நான் 100–க்கு அழைப்பு செய்தேன் என்றால் இல்லை.

12. அவ்வாறு 100க்கு அழைப்ப செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை. நான், எனது மாமனார், மாமியார், எனது குழந்தை ஆகியோர் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனது கணவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் 02.05.2025ம் தேதி தெரிவித்தேன். சம்பவ இடத்திற்கு மாமனார், மாமியார் வந்தார்களா என்றால் இல்லை. நான், எனது தாயாரையோ, எனது தந்தையையோ மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்தேனா என்றால் எனது தம்பி உடன் சென்றிருந்தார், நான் புகார் கொடுக்கச் சென்றேன்.

13. எனது ஊருக்கும் உத்தமபாளையம் மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கும் உத்தமபாளையம் காவல்நிலையத்தில் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ. தூரம் இருக்கும். நான் இதற்கு முன்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் காவல்நிலையம் சென்றபோது, நடந்த விபரத்தை முதன்முதலில் நான் சொன்னேன் என்றால் இல்லை, எனது பாட்டி சொன்னார். எனது பாட்டி காவல்நிலையத்தில் சொல்லும்போது காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால் இருந்தார்.

14. காவல் ஆய்வாளர் முன்பு தான் சம்பவத்தை கூறினார் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் எழுதிக்கொண்டாரா என்றால் எனது பாட்டி சொன்னதை நான் எழுதிக்கொடுத்தேன். போலீசார் எனது பாட்டியை தனியாக விசாரித்தார்கள் என்றால் நாங்கள் இருவரும் ஒன்றாக தான் இருந்தோம், சாட்சி மீண்டும் பாட்டியை தனியாக விசாரித்ததாக கூறுகிறார். எனது பாட்டியை போலீசார் தனியாக எவ்வளவு விசாரித்தார்கள் என்றால் அரை மணி நேரம் விசாரித்தார்கள். அதன்பின்னர் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

15. என்னையும் எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் அரை மணி நேரம் விசாரித்தார்கள். காவல்நிலையம் செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 11.45 மணி இருக்கும். என்னையும், எனது பாட்டியையும் விசாரித்தப் பிறகு நடந்த விபரத்தை எழுதிக்கொடுக்க சொன்னார்கள் என்றால் சரிதான். நான் ஆய்வாளர், உத்தமபாளையம் காவல்நிலையம் என்று பெறுநர் முகவரி எழுதிக்கொடுத்தேன். வழக்குச் சம்பந்தமாக போலீசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 02.05.2025, 06.05.2025ம் தேதிகளில் விசாரித்தார்கள். எனது ஊரிலிருந்து காவல்நிலையத்தில் எதில் சென்றேன் என்றால் ஆட்டோவில் சென்றோம்.

16. அந்த ஆட்டோ தெரிந்த ஆட்டோவா என்றால் இல்லை. என்னுடைய கையெழுத்து மற்றும் கையொப்பத்தை சோதனை செய்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளேன். புகாரின் கடைசி பக்கத்தில் உள்ள 5 வரிகள் நெருக்கமாக எழுதப்பட்டு, கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முந்தைய பக்கங்களில் இடைவெளி விட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரும் சார்பு ஆய்வாளர், உத்தமபாளையம் காவல்நிலையம் என்ற முகவரிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. 02.05.2025ம் தேதிய போலீசார் விசாரணையில் ஆம்புலன்ஸ் வந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்ற விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல என்றாலும், அதிலுள்ள சங்கதிகள் நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் முதன்முதலில் ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு, அதில் உள்ள சங்கதிகள் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

18. எனது குடும்பத்தார்கள் எதிரிகள் குடும்பத்தை சட்டத்திற்கு முரணாக அவர்கள் வீட்டிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்று முயற்சித்தோம் என்றாலும், அது குறித்து சாட்சி ராஜேந்திரன் தலைமையில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டது என்றாலும், அந்த விரோதத்தின் காரணமாக எனது தம்பி ஜெயசூர்யா, முத்துமாயன், சுந்தர், சுதா அனைவரும் எதிரிகளின் குடும்பத்தாரை தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றாலும், அக்கம் பக்கத்தினர் சத்தம் கேட்டு எதிரிகள் பாதுகாக்கப்பட்டு, அதன் பின்னிட்டு ஏற்பட்ட கலவரத்தில் சுந்தர், முத்துமாயன், சுதா, எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதையும் நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

19. எனது தாயாரையும், எனது தம்பியையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவர்களை தலைமறைவாக்கினோம் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் புகார் கொடுக்கவில்லை என்றாலும், இதுவும் பின் ஆலோசனையின்பேரில் தயாரிக்கப்பட்டது என்பதால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றாலும், பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நீதிபதியிடம் நான் கொடுத்த வாக்குமூலம் எனது குடும்பத்தார்கள் சொல்லிக்கொடுத்து நான் சொன்னது என்றால் சரியல்ல. போலீசாருக்கும் 1வது எதிரி பார்த்திபனுக்கும் மருத்துவமனையில் வைத்து தகராறு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. அவ்வாறு தகராறு ஏற்பட்டதால் போலீசார் உண்மையை மறைத்து எங்களுக்கு ஆதரவாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.23 16:35:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.03.2026